**<u>JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU</u>**

**<u>CC No.329/2016</u>**
**<u>DEPOSITION OF WITNESS</u>**
**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**
*********

| | |
|---|---|
| Deposition of witness for | : PW- 8 |
| Name | : Tmt.Shanmuga Lakshmi |
| Husband's Name | : பெருமாள் சாமி |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2021.

**முதல் விசாரணை -**

நான் சேலையூர், தாம்பரத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2014 ஆம் வருடம் மாதம், தேதி நினைவில் இல்லை கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து மதுரை செல்வதற்காக பேருந்தில் நானும் எனது கணவரும் புறப்பட்டோம். பேருந்து சிங்கபெருமாள் கோயில் அருகே வந்தபொழுது பேருந்து விபத்துக்குள்ளானது, எனக்கு தலை, கண், கால், கை பகுதிகளில் கண்டக்டர் சீட் அருகே மோதி அடிபட்டு மயக்கமடைந்து விட்டேன். என்னை எஸ்ஆர்எம் மருத்துவமனையில் அனுமதித்திருந்தனர். எனது கணவருக்கு கையில் மட்டும் காயம் ஏற்பட்டிருந்தது. 3 நாட்கள் எஸ்ஆர்எம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தேன். அதன்பிறகு போலிசார் வந்து என்னிடம் விபத்து எப்படி நடந்தது என்று விசாரித்தனர். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தனர். வண்டியின் ஓட்டுநர் யாரென்று எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை.

**குறுக்கு விசாரணை –**

போலிசார் என்னை 2, 3 நாட்கள் கழித்து விசாரணை செய்தனர். உங்களுக்கு ஏற்பட்ட காயம் சடர்ன் பிரேக் போட்டாலும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் ஆமாம். நீங்கள் அரசு பேருந்தில்தான் பயணம் செய்தீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் அரசு பேருந்து வேகமாக இயக்கப்பட்டதா என்றால் ஓரளவாக இயக்கப்பட்டது. நான் இடித்த மாத்திரத்தில் மயக்கமடைந்து விட்டேன். நீங்கள் பயணித்த அரசு பேருந்தின் ஓட்டுநரால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் அப்படி இல்லை.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.